26.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கான தொலைக்காட்சி: இன்று தொடக்க ம்**

மத்திய அரசின் தூர்தர்ஷன் நிறுவனம் சார்பில் "டி.டி. கிஸான்' என்ற பெயரில் விவசாயிகளுக்கான பிரத்யேக தொலைக்காட்சி அலைவரிசையின் ஒளிபரப்பு சேவையை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மே 26) தொடங்கி வைக்கிறார். இதுகுறித்து தில்லியில் மத்திய தகவல், தொழில்நுட்பத்துறை அமைச்சர் அருண் ஜேட்லி செய்தியாளரிடம் திங்கள்கிழமை கூறியதாவது: "டி.டி. கிஸான்' தொலைக்காட்சியின் ஒளிபரப்பை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மே 26) தொடங்கி வைக்கிறார். அனைத்து மாநிலங்களிலும் விவசாயிகள் உள்ளனர். ஆதலால், கேபிள் சட்டத்தின் கீழ் "டி.டி. கிஸான்' தொலைக்காட்சியை கட்டாயமாக அனைத்து கேபிள் நிறுவனங்களும், டி.டி.எச். நிறுவனமும் ஒளிபரப்ப வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இது, 24 மணி நேரத் தொலைக்காட்சியாகும் என்றார் ஜேட்லி.

**ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்துக்கு இடம் தேர்வு**

அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணியில் அதிகாரிகள் திங்கள்கிழமை ஈடுபட்டனர்.

நாட்டில் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதற்காக விவசாயிகளுக்குத்

தேவையான ஆலோசனைகளையும், மானிய விலையில் விதை, உரம் மற்றும் கருவிகளையும் வழங்கி வருகிறது.

இதனிடையே அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வேளாண் விரிவாக்க மையம் இயங்கி வருகிறது. இங்கு போதிய இடவசதிகள் இல்லாததால் விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களை பாதுகாப்பாக வைத்து உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்க முடியவில்லை.

எனவே நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு மேம்பாடு நிதி திட்டத்தின் கீழ், இங்கு ரூ.1.50 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் கட்டப்பட உள்ளது.

ஒன்றிய அலுவலக வளாகத்தில் கிடங்கு வசதியுடன் சுமார் 15 ஆயிரம் சதுர அடி அளவில் கட்டப்படவுள்ள இக்கட்டடத்துக்கான இடத்தினை, ஒன்றியக்குழுத் தலைவர் சுந்தரிமுருகன், துணைத் தலைவர் எம்.சி.சம்மந்தம், வட்டார வளர்ச்சி அலுவலர் துரைசாமி, உதவி வேளாண்மை இயக்குநர் இளவரசன், பொதுப்பணித் துறை பொறியாளர் ஜவகர்கிருபாகரன், ஒன்றியக் கவுன்சிலர்கள் ஜெய்சங்கர், மனோகரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

**வேலை உறுதித் திட்டத்தில் தோட்டப் பயிர் சாகுபடி:ஒடிஸா அரசு முடிவு**

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் தோட்டப் பயிர் சாகுபடியை சேர்க்க ஒடிஸா அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவைத் தொடர்ந்து, ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை இனி தோட்டப் பயிர் சாகுபடிக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது தொடர்பான அரசின் முடிவை அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் காணொலி மூலம் மாநிலத் தலைமைச் செயலர் ஜி.சி.பதி திங்கள்கிழமை தெரிவித்தார். நிகழ்ச்சியில் பதி பேசியதாவது: தோட்டப் பயிர் சாகுபடி தொடர்பான பிரச்னைகள் அனைத்தையும்

சம்பந்தப்பட்ட ஆட்சியர்களின் கவனத்துக்கு கோட்ட வன அலுவலர்களும் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்களும் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும். மாவட்டச் சுற்றுச்சூழல் கூட்டங்களையும் ஆட்சியர்கள் தவறாமல் நடத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது கடந்த பிப்ரவரி 5 -ஆம் தேதி நிறுத்தப்பட்டது. அதன்பிறகு குடிநீருக்கு மேட்டூர் அணையிலிருந்து தேவைக்கு ஏற்ப தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக அணையிலிருந்து நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் அணையிலிருந்து குடிநீருக்கு தண்ணீர் திறந்துவிடுவது நொடிக்கு 1000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 71.15 அடியாக இருந்தது. அணையின் நீர் இருப்பு 33.69 டி.எம்.சி.யாக இருந்தது.

**குமரி மாவட்டத்தில் பரவலாக மழை: மாம்பழத்துறையாறில் அதிகபட்சமாக 43.மி.மீ.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக மாம்பழத்துறையாறு அணைப் பகுதியில் 43 மி.மீ. மழை பதிவானது.

குமரி மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக மழை ஓய்ந்திருந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது.

நாகர்கோவில், சுசீந்திரம், குளச்சல், மாம்பழத்துறையாறு, கொட்டாரம், மயிலாடி, கன்னியாகுமரி உள்ளிட்டப் பகுதிகளில் மழை பெய்தது. மாம்பழத்துறையாறு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைப்பகுதி மற்றும் மலையோரப் பகுதிகளில் சாரல் மழை பெய்ததால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. செவ்வாய்கிழமை அதிகாலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 40 அடியை எட்டியது. அணைக்கு 239 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71.85 அடியை எட்டியது. அணைக்கு 261 கனஅடி தண்ணீர் வந்தது. சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 17.06 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 17.16 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 9.10 அடியாகவும் உள்ளது. மாம்பழத்துறையாறு அணை முழுகே கொள்ளளவான 54.12 அடியை எட்டி நிரம்பி வழிகிறது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யும் முக்கடல் அணையின் நீர்மட்டம் 21 அடியை எட்டியுள்ளது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மழையழவு: மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கி திங்கள்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பெருஞ்சாணி 3.4, மாம்பழத்துறையாறு 43, குளச்சல் 7.6, இரணியல் 5, குருந்தன்கோடு 19.4, அடையாமடை 14.8, கோழிப்போர்விளை 41, திருவட்டார் 23, புத்தன் அணை 4.2, நாகர்கோவில் 26.6, மயிலாடி 22.2, கொட்டாரம் 8.2 மி.மீ. மழை பதிவானது.

**இன்று கேரளம் செல்கிறார் ராகுல்: மீனவர்கள், ரப்பர் பயிரிடுவோரை சந்திக்கிறார்**

கேரளத்தில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி செவ்வாய்க்கிழமை (மே 26) முதல் சுற்றுப்பயணம் செய்கிறார். இந்தப் பயணத்தின்போது, மீனவர்களையும், ரப்பர் மரங்கள் வளர்ப்போரையும் ராகுல் காந்தி சந்தித்துப் பேசவுள்ளார். இதுதொடர்பாக தில்லியில் உள்ள ராகுல் காந்தியின் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கேரளத்துக்கு செவ்வாய்க்கிழமை வரும் ராகுல் காந்தி, கோழிக்கோட்டில் இளைஞர் காங்கிரஸ் சார்பில் நடைபெறும் கூட்டத்தில் பேசவுள்ளார். திருச்சூர் மாவட்டத்தில் மீனவர்களை ராகுல் காந்தி புதன்கிழமை சந்தித்துப் பேசுகிறார். அதைத் தொடர்ந்து, எர்ணாகுளம் மாவட்டத்தில் அலுவா என்னுமிடத்தில் ரப்பர் மரம் வளர்ப்போர் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை ராகுல் காந்தி சந்தித்துப் பேசவுள்ளார். கேரளத்தை தொடர்ந்து, மத்தியப் பிரதேச மாநிலம், மிகோவுக்கு ராகுல் காந்தி ஜூன் மாதம் 2ஆம் தேதி செல்கிறார். அப்போது அவர், காங்கிரஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் 125ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்ச்சிகளை தொடங்கி வைக்கவுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிப் பணியில் இருந்து 56 நாள்களுக்கு விடுப்பில் சென்ற ராகுல் காந்தி, அதன்பிறகு மீண்டும் அரசியலுக்கு திரும்பியதும், மத்தியில் ஆளும் பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு எதிராக தீவிர பிரசாரம் செய்து வருகிறார். மத்திய அரசின் நிலம் கையகப்படுத்துதல் சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் ராகுல் காந்தி தீவிரமாக குரல் கொடுத்தார். அதையடுத்து, உத்தரப் பிரதேச மாநிலம் விதர்பா பிராந்தியத்திலும், தெலங்கானா மாநிலத்திலும் விவசாயிகளின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி அவர் நடைபயணம் மேற்கொண்டார். அப்போது

விவசாயிகளைச் சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். முன்னாள் ராணுவ வீரர்கள், அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகளை வாங்கிய நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரையும் ராகுல் சந்தித்தார். இதைத் தொடர்ந்து, கேரளத்தில் மீனவர்களையும், ரப்பர் மரம் வளர்ப்போரையும் அவர் சந்தித்து பேசவிருக்கிறார். கேரள சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ளது. இந்நிலையில், கேரளத்துக்கு ராகுல் காந்தி செல்வது, அக்கட்சியினருக்கு உற்சாகத்தைத் தரும் என நம்பப்படுகிறது.

**கொடைக்கானலில் கோடை விழா நிறைவு**

கொடைக்கானலில் திங்கள்கிழமை நடைபெற்ற கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஹரிஹரன் பரிசு வழங்கினார். கொடைக்கானலில் கோடை விழா கடந்த 16-ஆம் தேதி மலர் கண்காட்சியுடன் தொடங்கியது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெற்ற விழாவில் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவை நடைபெற்றன. இந்நிலையில் கோடை விழா நிறைவு நாள் நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ந.ஹரிஹரன் தலைமை வகித்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். நிகழ்ச்சியில் வேணுகோபாலு எம்.எல்.ஏ., கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் சுரேஷ், கொடைக்கானல் நகர்மன்றத் தலைவர் ஸ்ரீதர், நகராட்சி ஆணையர் காளிமுத்து, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் பாண்டி, வட்டாட்சியர் சங்கரசேகரன், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர்

பொன்னுத்துரை, அதிமுக நகரச் செயலர் ஜான் தாமஸ், சுற்றுலா அலுவலர் குணசேகரன், பூங்கா மேலாளர் எபன்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**2-ஆவது நாளாக சென்னை, வேலூரில் 108 டிகிரி வெயில்**

நிகழாண்டில் கோடைக் காலத்தில் தொடர்ந்து 2-ஆவது நாளாக, சென்னை, வேலூரில் திங்கள்கிழமையன்று 108 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவானது. மேலும், பரங்கிப்பேட்டை, கடலூர், தருமபுரி உள்ளிட்ட 10 இடங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கோடை வெயிலின் உச்சமான கத்திரி வெயில் கடந்த 4-ஆம் தேதி தொடங்கியது. அன்றைய தினம் முதல் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை, வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி போன்ற காரணங்களால், தமிழகம் முழுவதும் பரவலாக இரண்டு வாரங்கள் மழை பெய்தது. தற்போது, மழையின் அளவு குறைந்து வருவதால், சென்னை உள்பட ஒரு சில மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக வெயில் சுட்டெரித்து வருகிறது. அக்னி நட்சத்திரம் காலம் முடிவடைய இன்னும் ஒரு வாரம் உள்ள நிலையில், வெப்பத்தின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 10 இடங்களில் 100 டிகிரி வெயில்: நிகழாண்டு கோடையில் 2-ஆவது நாளாக, திங்கள்கிழமையும், சென்னை, வேலூரில் 108 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெப்பநிலை பதிவானது. மேலும் மாநிலம் முழுவதும் 10 இடங்களில் 100 டிகிரிக்கு மேல் வெப்பநிலை பதிவானது. அதிக வெப்பம் காரணமாக, காலை முதலே பெரும்பாலான மாவட்டங்களில் அனல் காற்றுடன் கூடிய புழுக்கம் நிறைந்து காணப்பட்டது. குறிப்பாக, சென்னை, அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் அனல் காற்றும், புழுக்கமும் தீவிரமாக இருந்தது. இதனால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் அவதிக்குள்ளாகினர். திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

சென்னை மீனம்பாக்கம் - 108

வேலூர்- 108

சென்னை நுங்கம்பாக்கம் - 107.9

பரங்கிப்பேட்டை- 103

தருமபுரி - 103

கடலூர் - 103

திருச்சி - 101

பாளையங்கோட்டை-101

மதுரை-101

சேலம் - 100

கரூர் பரமத்தி - 100

நாகை-100

புதுச்சேரி- 105

**மானிய விலையில் மாட்டுத் தீவனம்**

புண்ணாக்கு, பருத்தி விதை உள்ளிட்ட மாட்டுத் தீவனப் பொருள்களை மானிய விலையில் அரசு வழங்க வேண்டும் என காங்கயம் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.காங்கயம், ஊதியூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் உப தொழிலாக கறவை மாடுகளை வளர்த்து, பால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். அரசு மற்றும் தனியார் பால் கொள்முதல் நிலையங்கள் மூலமாக பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

மேய்ச்சல் நிலங்களில் கறவை மாடுகளை மேய்த்தாலும், பாலில் கொழுப்பு, இதர சத்துக்கள் அதிகமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக தேங்காய், பருத்தி விதை, கடலை ஆகியவற்றின் புண்ணாக்கும் கறவை மாடுகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இதில், பருத்தி விதைப் புண்ணாக்கு அதிகளவில் கொடுக்கப்படுகிறது. பருத்தி விதைப் புண்ணாக்கு மூட்டை

ரூ. 1,100-க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், கடந்த 2 மாதங்களாக அதன் விலை படிப்படியாக அதிகரித்து, தற்போது மூட்டை ரூ. 1,450-க்கு விற்கப்படுகிறது. இந்த விலையேற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கறவை மாடுகள் வளர்க்கும் விவசாயிகள் தெரிவத்தனர். இது குறித்து விவசாயி மறவபாளையம் டி.விஸ்வநாதன் கூறியது: ஏற்கெனவே பால் விலை குறைந்துள்ள காரணத்தால் பால் உற்பத்தியில் லாபம் ஏதுமின்றித் தவித்து வருகிறோம். இந்நிலையில் மாட்டுத் தீவனங்களின் விலையும் படிப்படியாக அதிகரித்து வருவதால் மேலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, வைக்கோல் மானிய விலையில் வழங்குவது போல், மாட்டுத் தீவனங்களையும் மானிய விலையில் வழங்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**வரத்து குறைவால் மீன் விலை அதிகரிப்பு**

திருவாடானை தாலுகா பகுதிகளில் கடும் வெயில் தாக்கி வருவதால் வரத்து குறைந்து மீன் விலை அதிகரித்துள்ளது. திருவாடானை தாலுகா தொண்டி நம்புதாளை எஸ்.பி. பட்டினம், முள்ளிமுனை காரங்காடு, திருப்பாலைக்குடி போன்ற கடல் பகுதிகளில் கடந்த சில நாள்களாக கடும் வெயில் தாக்கி வருவதால் மீன் வரத்து குறைந்துள்ளது.

இதனால் கடும் கிராக்கி ஏற்பட்டு தொண்டி திருவாடானை சந்தைகளில் திங்கள்கிழமை அன்று ரூ.250க்கு விற்ற விளமீன் ரூ.350க்கும், ரூ.300க்கு விற்ற நண்டு ரூ.400க்கும், ரூ.300க்கு விற்ற முரல் மீன் ரூ.450க்கும் விற்பனை ஆனது.

**நாளை உடுமலையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் புதன்கிழமை (மே 27) நடைபெறவுள்ளது.இது குறித்து கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள் வெளியிட்ட செய்தி: உடுமலை வருவாய்க் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் புதன்கிழமை காலை 11

மணி அளவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்க இருக்கும் இக்கூட்டத்தில் உடுமலை, மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் பங்கேற்று, தங்களது குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம்.

**ஆற்காட்டில் சூறைக் காற்றுடன் மழை**

ஆற்காடு பகுதியில் சூறைக் காற்றுடன் திங்கள்கிழமை பெய்த மழையால் சாலை ஓரங்களில் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால், ஆற்காடு- வேலூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஆற்காடு பகுதியில் திங்கள்கிழமை பகலில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. மாலையில் இடியுடன் பலத்த காற்று வீசியதோடு, மழையும் பெய்தது. மேலும், பலத்த காற்று வீசியதால் வேப்பூர், விஷாரம், ஆற்காடு, ஆரணி சாலைகளின் ஓரங்களில் இருந்த பத்துக்கும் மேற்பட்ட புளிய மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால், ஆற்காடு- வேலூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வாகனங்கள் புறவழிச் சாலையில் திருப்பி விடப்பட்டன. மேலும், மின் கம்பங்கள் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

**மே 29-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் மே 29-ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறும் என ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார். முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**மே 28-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் வியாழக்கிழமை (மே 28) நடைபெற உள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வியாழக்கிழமை (மே 28) காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது. காலை 10 மணிக்கு விவசாயிகள் அறியும் வகையில் வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் பொறியியல், தோட்டக்கலைத்துறை சார்பில் கருத்துக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான தங்களது குறைகளையும், கருத்துகளையும் தெரிவித்துப் பயனடையலாம்.

**மே 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மே 28 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். எனவே, பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின்

பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

**சாத்தான்குளம், பேய்க்குளத்தில் பதநீர் உற்பத்தி அதிகரிப்பு**

சாத்தான்குளம், பேய்க்குளம் பகுதிகளில் கடந்த ஆண்டை விட பதநீர் உற்பத்தி அதிகரித்துள்ளதாக பனைத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.சாத்தான்குளம், பேய்க்குளம் பகுதிகளில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் பனைத் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தது. நாளடைவில் பனைத் தொழிலில் அதிக வருவாய் இல்லாததால் இதைச் சார்ந்த தொழிலாளர்கள் வேறு தொழிலை நாடிச் சென்றனர். பனையில் இருந்து இறக்கப்பட்டும் பதநீர் சீசன் மார்ச் மாதம் கடைசியில் தொடங்கி ஆகஸ்ட் மாதம் வரை இருக்கும். இப் பகுதியில் சில தொழிலாளர்கள் மட்டுமே இத்தொழிலை பகுதிநேர தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். நிகழாண்டில் இப்போது பதநீர் சீசன் தொடங்கியுள்ளது. சீசன் தொடங்கும் காலம் பெரும்பாலும் கோடைக் காலம் என்பதால் ஒரு பனையில் இருந்து ஒரு குடம் அல்லது 2 குடம் மட்டுமே பதநீர் கிடைக்கும். நிகழாண்டில் சீசன் தொடங்கியபோது முதலில் கடும் வெயில் அடித்ததால் பதநீரின் அளவு குறைந்து காணப்பட்டது. இப்பகுதியில் பதநீர் ஒரு கலசம் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதற்கென பனைத் தொழில் நடைபெற்று வரும் இடத்தில் தாற்காலிக குடில் அமைத்து கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு தயாரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. புதுக்குளம், ஞானியார்குடியிருப்பு பகுதிகளில் சாலையோரங்களில் பதநீர் இறக்கிவைக்கப்பட்டு தொழிலாளர்களால் விற்கப்பட்டு வருகிறது. நாகர்கோவில் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து இங்கு வருபவர்கள் பதநீரை விரும்பி பருகி வருகின்றனர்.

கடந்த வாரம் கோடை மழை பெய்ததால் பனையில் உள்ள பாளையில் கூடுதலாக பதநீர் அதிகரித்திருப்பதாகவும், இதனால் ஒரு பனையில்

நாள் ஒன்றுக்கு 3 அல்லது 4 குடம் வரை பதநீர் கிடைக்கத் தொடங்கி உள்ளதாகவும் பனைத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு பதநீர் ஒரு கலசம் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்யப்பட்டது. இப்போது ஒரு கலசம் ரூ.100-க்கு விற்பனையாகிறது. மேலும் இங்கு தயாரிக்கப்படும் கருப்புக்கட்டி ரூ. 130-க்கும், பனங்கற்கண்டு ரூ.220-க்கும் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பதநீர் குறைந்து காணப்பட்டதால் கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு தயாரிப்பது பாதிக்கப்பட்டது.

இது குறித்து புதுக்குளம் ஊராட்சித் தலைவர் ச. பாலமேனன் கூறியதாவது: பதநீர் தொழில் சீசன் சுமார் 6 மாதம் வரைதான் இருக்கும். ஆனால் இப்போது பனைத் தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் இப்பகுதியில் போலியாக கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் விற்பனைக்கு வருகிறது. இதனால் பனைத் தொழிலாளர்களுக்கு கருப்புக்கட்டி உள்ளிட்ட பொருள்களின் தயாரிப்புக்கு உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்படும் நிலை உருவாகி வருகிறது. எனவே பனைப் பொருள்களை இப்பகுதியில் உள்ள தொழிலாளர்களே சந்தைப்படுத்தும் வகையில் நெல் கொள்முதல் நிலையம்போல் சாத்தான்குளம், உடன்குடி, திருச்செந்தூரை மையமாகக் கொண்டு இத்தொழில் மேம்படவும் அரசு ஆவன செய்ய வேண்டும். இதனால் பனைத் தொழிலாளர்கள் நேரடியாக பயன்பெறும் நிலை உருவாகும் என்றார் அவர்.

**நாடு, ஏலக்கி ரக வாழைகளைத் தாக்கும் வாடல் நோய்**

நாடு மற்றும் ஏலக்கி ரக வாழைகளைத் தாக்கும் வாடல் நோயை கட்டுப்படுத்த வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது. கடலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில் குறிப்பாக நாடு மற்றும் ஏலக்கி ரகங்களில் புதிய வகை வாடல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இந்நோய் தாக்கப்பட்டு குலை தள்ளும் நிலையிலுள்ள

வாழை மரங்களில் இலைகள் பழுத்து காணப்படும். வாழை மரத்தை தொட்டவுடன் இற்று போய் சாய்ந்து விடும். எனவே நோய் தாக்கப்பட்ட மரங்களை வேருடன் அகற்றி விட்டு குழிகளில் 50 கிராம் வீதம் பிளீச்சிங் பவுடர் தூவ வேண்டும். அருகிலுள்ள மரங்களுக்கு இந்நோய் பரவாமல் தடுக்கும் வகையில் ஒரு லிட்டருக்கு 10 கிராம் பிளீச்சிங் பவுடர் என்ற அளவில் கலந்து மரத்தைச்சுற்றி ஊற்ற வேண்டும். இந்நோய் விரைவில் பரவும் தன்மையுள்ளதால் வாழை விவசாயிகள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி நோயை கட்டுப்படுத்துவது மிக முக்கியமானதாகும். இது தொடர்பாக மேலும் விளக்கம் பெற அருகாமையிலுள்ள தோட்டக்கலைத் துறை வட்டார மையங்களின் களப்பணியாளர்களை அணுகலாம் என்று தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) பொ.மணிமொழி தெரிவித்துள்ளார்.

தினமலர்

**பசுந்தாள் எரு விதைகள் வினியோகம்**

வாலாஜாபாத்: காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, 150 கிலோ பசுந்தாள் எருவிதையை, வேளாண் துறை நிர்வாகம் வினியோகம் செய்து உள்ளது.

இயற்கை வழி வேளாண் விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாகவும்; ரசாயன உரங்களை தவிர்ப்பதற்காகவும் பசுந்தாள் எருவிதைகளை உற்பத்தி செய்வதற்கு, வேளாண் துறை நிர்வாகம் விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. அதன் அடிப்படையில், காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் வட்டாரங்களைச் சேர்ந்த, 50 விவசாயிகளுக்கு, வேளாண் துறை நிர்வாகம், 150 கிலோ பசுந்தாள் எருவிதைகளை நேற்று, இலவசமாக வினியோகம் செய்து உள்ளது. இந்த விதை உற்பத்தி மூலம்

இயற்கை உரங்களின் பயன்பாடு விவசாயத்தில் அதிகரிக்கும் என, வேளாண் துறை உயரதிகாரிகள் தெரிவித்தார்.

**ஊட்டி அரசு மூலிகை தோட்டத்தில் தகவல் சேகரித்த ஆந்திர மாணவியர்**

ஊட்டி : ஊட்டி அரசு மூலிகை தோட்டத்தில், ஓமியோபதி மருந்துகளின் மூலப்பொருட்களாக விளங்கும் மூலிகை செடிகளை, ஆந்திர மருத்துவ கல்லூரி மாணவர்கள், அறிந்து சென்றனர்.ஊட்டி அருகே எமரால்டு பகுதியில், அரசு ஓமியோபதி மருத்துவ மூலிகை ஆய்வு கூடம் செயல்படுகிறது. இங்கு மூலிகை தாவரங்கள் குறித்த ஆய்வு நடந்து வருகிறது; ஆய்வு பயன்பாட்டுக்கு போக, எஞ்சியுள்ள மூலிகைச் செடிகள், தனியார் மருந்து கம்பெனிகளுக்கு, மருந்து தயாரிப்புக்காக விற்பனை செய்யப்படுகின்றன.நாடு முழுக்க, ஓமியோபதி மருத்துவம் படிக்கும் மாணவ, மாணவியருக்கு, மூலிகைச் செடிகளை அறிந்து கொள்வதற்கான கல்வி கூடமாகவும் இம்மையம் செயல்படுகிறது. அந்த வகையில், ஆந்திர மாநிலம், கடப்பா ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர், 150 பேர், மூன்று பேராசிரியர்களின் தலைமையில், இந்த மையத்திற்கு வந்து, அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள, மூலிகைச் செடிகளை பார்வையிட்டு, விபரங்களை தெரிந்து கொண்டனர்.

அவர்களுக்கு பயிற்சி வழங்கிய மையத்தின் தலைமை விஞ்ஞானி டாக்டர் ராஜன் கூறியதாவது; ஓமியோபதி மாணவ, மாணவியர், நோயாளிகளுக்கு வழங்கும் மருந்துகள், எந்த மூலிகைச் செடியில் இருந்து தயாரிக்கப்படுகின்றன என்ற விபரத்தை கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும்; அவர்களது பாடத்தில், அதற்கென தனி பாடப் பிரிவே உள்ளது. மாரடைப்பு, கண்புரை, மஞ்சள் காமாலை உட்பட பலவித நோய்களுக்கு மருந்து தயாரிக்க பயன்படுத்தும் மூலிகைச் செடிகள் உட்பட ரோஸ்மேரி, தைம், வெட்டி வேர் உட்பட, 80 வகையான மூலிகைச் செடிகள் இந்த ஆய்வுக் கூடத்தில், பாதுகாக்கப்பட்டு,

பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள மூலிகைச் செடிகளின் பெயர், அவற்றின் பயன், அவற்றை விதைகளாக மாற்றுவது எப்படி என்பது உட்பட விபரங்கள், ஓமியோபதி மாணவ, மாணவியருக்கு விளக்கப்பட்டது; அவர்களும், ஆர்வமுடன், வியப்பு மேலிட விபரங்களை சேகரித்து சென்றனர்.இவ்வாறு, டாக்டர் ராஜன் கூறினார்.

**பழ கண்காட்சி நிறைவு விழாவில் 52 பேருக்கு கோப்பை**

குன்னுார் : குன்னுாரில் நடந்த பழக்கண்காட்சி பரிசளிப்பு விழாவில், மொத்தம், 52 கோப்பைகள் வழங்கப்பட்டன. குன்னுார் சிம்ஸ் பூங்காவில், 57வது பழக்கண்காட்சி, 23ம் தேதி துவங்கி நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. நிறைவு விழாவிற்கு கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பரிசுகளை வழங்கி பேசியதாவது:குன்னுாரில் 'சிம்' என்பவர் எடுத்த முயற்சியால் தற்போது இங்கு அரிய வகை மரங்களுடன் பூங்கா சிறப்பாக காணப்படுகிறது. 100 ஆண்டு பழமை வாய்ந்த மரங்களும், ரெட்ஸிடார், ருத்திராட்சம், யானைக்கால் உட்பட அரிய வகை மரங்களும் உள்ளன.ஆதிகால மனிதனுக்கு சக்தியை கொடுத்தது பழங்கள் தான். தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு பழங்கள் நமக்கு பயன் தருகின்றன. கோடையில் கிடைக்கும், அதிக இனிப்பு மற்றும் குளிர்ச்சியான பழங்கள் உடலுக்கு வெப்பத்தை தணித்து குளுகோஸ் கிடைக்கச் செய்கின்றன.

மழைக்காலத்தில் கிடைக்கும் பேரி, பெர்சிமென், மங்குஸ்தான் உள்ளிட்ட பழங்கள் உடலையும், மனதையும் பக்குவப்படுத்துகின்றன.குளிர்காலத்தில், விளையும் விளாம்பழம் உட்பட சில வகை பழங்கள் எதிர்ப்பு சக்தியை கொடுக்கிறது. நோய்களை தடுக்கும் முக்கிய பங்கு வகிக்கும் பழ மரங்களை வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். விழாவில், சிறப்பாக அரங்குகள் அமைத்தவர்களுக்கும், பழங்களை காட்சிப்படுத்தியவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், ஏழு

சுழற்கோப்பைகள், முதல் பரிசாக 25 கோப்பைகள், 2ம் பரிசாக நான்கு கோப்பைகள், சிறப்பு பரிசாக, 16 கோப்பைகள் என மொத்தம், 52 கோப்பைகள் வழங்கப்பட்டன.

## பயனற்ற நிலத்தில் பழ மர பூங்கா அமைக்க கோரிக்கை

குன்னூர் : 'குன்னூரில் 2 ஏக்கர் பயனற்ற நிலத்தில், பழ மரங்களை கொண்ட பூங்கா அமைக்க வேண்டும்' என பழக்கண்காட்சியில் வலியுறுத்தப்பட்டது. குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடந்த பழக்கண்காட்சி நிறைவு விழாவில், நகராட்சி தலைவர் சரவணன் பேசுகையில், "நீலகிரி மாவட்டத்தில் எஸ்டேட்டுகள், பழ மரங்கள் அழிக்கப்பட்டு காட்டேஜ்களாக மாறி வருகிறது. வீட்டு தோட்டங்களுக்கு ஏற்றவாறு பழ மரங்களை ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்க வேண்டும். பழ மரங்களை அதிகளவில் நட்டு வளர்க்க குன்னூரில் உழவர் சந்தை அருகே பயனற்ற வகையில் உள்ள இரண்டு ஏக்கர் நிலத்தில், பூங்கா அமைக்க வேண்டும்." என்றார். எம்.பி., அர்ஜுனன், கோபாலகிருஷ்ணன், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் சீனிவாச ரெட்டி, மாவட்ட ஊராட்சி தலைவி மேனகா, நகராட்சி துணைத் தலைவர் மணி, குன்னூர் ஒன்றிய செயலாளர் ஹேம்சந்த் உட்பட பலர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடி விரிவுபடுத்த கூட்டத்தில் கலெக்டர் வலியுறுத்தல்

தஞ்சாவூர்: திருந்தி நெல் சாகுபடி திட்டத்தினை விரிவுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, கலெக்டர் தெரிவித்தார். தஞ்சை உழவர் சந்தை அரங்கில் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை ஆய்வு கூட்டம், கலெக்டர் சுப்பையன், தலைமையில் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது: வேளாண்மைத்துறை அலுவலர்கள், அதன் துறை சார்ந்த திட்டங்களை, கடைகோடி விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில், செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். புதுமையான நவீன

முறைகள் குறித்து, விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். திருந்திய நெல் சாகுபடி திட்டத்தினை விரிவுப்படுத்தி, அனைத்து பகுதிகளிலும் செம்மையாக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாய பயிர்கள், தோட்டக்கலை பயிர்கள், ஊடுபயிர்கள் மற்றும் பணப்பயிர்கள் சாகுபடி பரப்பினை, ஒவ்வொரு ஆண்டும் இலக்கை தாண்டி சாதனை படைக்க வேண்டும். மாவட்ட அலுவலர்கள், மாநில அளவில் உணவு உற்பத்தியில் இலக்கை தாண்டி சாதனை புரியும் வகையில் பாடுபடவேண்டும். காலம் காலமாக விவசாயிகள் லாபம் பெற முடியாத நிலையினை மாற்றி, விவசாயம் ஒரு லாபகரமான தொழிலாக முன்னேறுவதற்கு, வேளாண்துறை அலுவலர்கள் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**துளசி சேகரிப்பில் முன்னணி கிராமம்**

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் இருந்து துளசி செடிகள் பதப்படுத்தி, வெளி மாவட்டங்களுக்கு மருந்து, சோப்பு தயாரிக்க ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மூலிகை செடிகளில் முதலிடம் பெறுவது துளசி. சர்வயோக நிவராணியாக விளங்குகிறது. உடலில் ஏற்படும் ஒவ்வாமை நோய்கள், தோல் நோய்களை தீர்க்கக் கூடியது. இருமல், சளியை போக்கி, உடலுக்கு சக்தி தர வல்லது. இம்மூலிகை துளசி திண்டுக்கல் பூதிப்புரம் பகுதியில் அதிகளவு உள்ளது. ஆங்காங்கே வயல்வெளி வரப்புகளில் பயிராகிறது. இதை இந்த பகுதி கிராம மக்கள் சேகரித்து, வெயிலில் காய வைக்கின்றனர். இலைகளை உதிர்த்து, வெளிமாவட்டங்களுக்கும், உள்ளூர் பகுதிகளுக்கும் மருந்து பொருட்கள் தயாரிக்க அனுப்பி வைக்கின்றனர். வியாபாரிகளும் கிராமங்களை தேடி வந்து வாங்கி செல்கின்றனர். திண்டுக்கல் பூதிப்புரத்தை சேர்ந்த முத்துலட்சுமி கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் பல பகுதிகளில் துளசி நன்றாக வளர்கிறது. கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லாததால், இதன்

விளைச்சல் குறைவு. மழை பெய்து விட்டால், பார்க்கும் இடம் எல்லாம் துளசியாகத்தான் இருக்கும். துளசியை பதப்படுத்தி அனுப்புவதை ஒரு குடிசை தொழிலாகவே செய்கிறோம். நல்ல வருமானம் கிடைக்கிறது. கோவை உட்பட பல வெளி மாவட்டத்தினர் வாங்கி செல்கின்றனர், என்றார்.

**வங்கிகளில் விவசாய நகைக்கடன் நிறுத்தம்! கோடை சாகுபடி பணிகள் முடக்கம்**

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் பகுதிகளில், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், விவசாய நகை கடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கோடை கால பயிர் சாகுபடி செய்வது பாதிக்கப்பட்டுள்ளது . பருவ காலத்தில் நெல், மிளகாய் விவசாயத்திற்காக விவசாயிகள் தங்களது நிலப்பட்டா, 10 (1) சான்றிதழ்களை வழங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு சங்கங்களில், நகைகளை அடகு வைத்து குறைந்த வட்டியில், விவசாய நகை கடன்களை பெற்று வந்தனர். அறுவடை முடிந்ததும் நெல், வத்தல்களை விற்று நகைகளை மீட்டு வந்தனர். தற்போது,கோடை மழை தொடர்ந்து பெய்து வருவதால் பருத்தி, கேப்பை, சோளம் போன்ற பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக தங்களது நகைகளை, வங்கிகளில் அடகு வைத்து விவசாய நகைக்கடன் பெறும் முயற்சியில் இறங்கியுள்ளனர். ஆனால், வங்கிகள் கடன் தர மறுத்து வருகின்றன. மாறாக, வட்டி கூடுதலாக உள்ள பிற வகை கடன்களை வழங்கி, விவசாயிகளை அலைகழிக்கின்றனர்.

இதுகுறித்து காக்கூர் விவசாயி மூர்த்தி கூறுகையில்,""உழுதவன் கணக்கு பார்த்தால், உழக்கு கூட மிஞ்சாது. கையில் பணம் இல்லாததால் கடன் வாங்கியும், இருக்கும் ஒன்றிரண்டு நகைகளையும் அடகு வைத்து, கடன்கள் கேட்டால், செப்டம்பர், மார்ச் மாதங்கள் வரை மட்டுமே

நகைக்கடன்கள் வழங்கப்படும். மற்ற மாதங்களில் வழங்கபட மாட்டாது என ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாண்டியன் கிராம வங்கி, கூட்டுறவு கடன் சங்கங்கள் மறுத்து வருகின்றன. இதனால், கோடை விவசாய பணிகள் துவங்கினாலும், பணமில்லாமல் பாதியில் முடங்கியுள்ளது," என்றார். இதுகுறித்து வங்கி மேலாளர் ஒருவர் கூறுகையில், "" கோடை காலத்தில், நகைகளை அடகு வைத்து, விவசாய நகை கடன் பெறும் பலர், வியாபார நோக்கத்திற்காகவே பெறுகின்றனர். இதனால், வங்கி தலைமையிடங்களுக்கு பலர் புகார் தெரிவித்ததன் பேரில், விவசாய நகைக்கடன்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது," என்றார்.

**பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 40 அடியை எட்டியது**

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த இரண்டு நாட்களாக மழையின் அளவு குறைவாக இருந்தாலும், ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறை நீர்மட்டம் 40 அடியை எட்டியது. அதன் கொள்ளளவு 48 அடியாகும். பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71.85 அடியாக உள்ளது. இதன் கொள்ளளவு 77 அடியாகும். முக்கிய அணைகளான பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணியில் போதிய அளவு தண்ணீர் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கன்னிப்பூ சாகுபடி பணிகளை தொடங்கியுள்ளனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**கொடைக்கானலில் இந்த ஆண்டு சீசனையொட்டி பிரையண்ட் பூங்கா மூலம் ரூ.50 லட்சம் அரசுக்கு வருமானம் கலெக்டர் ஹரிகரன் தகவல்**



கொடைக்கானலில் இந்த ஆண்டு சீசனில் பிரையண்ட் பூங்கா மூலம் அரசுக்கு ரூ.50 லட்சம் வருமானம் கிடைத்துள்ளது என கலெக்டர் ஹரிகரன் தெரிவித்துள்ளார். கோடை விழா திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் நகரில் கடந்த 16-ந் தேதி கோடை விழா மற்றும் மலர்க்கண்காட்சி தொடங்கியது. இதனையொட்டி கடந்த 10 தினங்களாக பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. மேலும் மீன்பிடிக்கும் போட்டி, படகு அலங்கார அணிவகுப்பு மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடந்தன. இதையொட்டி கோடைவிழாவின் நிறைவு விழா பிரையண்ட் பூங்காவில் நேற்று நடைபெற்றது. விழாவுக்கு வேணுகோபாலு எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். சுற்றுலா அதிகாரி குணசேகரன் வரவேற்றார். திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் ஹரிகரன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

2 லட்சம் சுற்றுலா பயணிகள் இயற்கை எழில் கொஞ்சும் கொடைக்கானலுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். தமிழக முதல்-அமைச்சர் சுற்றுலா வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இதேபோன்று கொடைக்கானலின் சுற்றுலா வளர்ச்சிக்காக 2014-15-ம் ஆண்டு 178 கோடியே 51 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் நடந்து வருகிறது. பிரையண்ட் பூங்காவிற்கு கடந்த ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் இன்று (அதாவது நேற்று) வரை 1 லட்சத்து 90 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன் மூலம் 50 லட்சத்து 85 ஆயிரத்து 910 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. மேற்கண்டவாறு கலெக்டர் ஹரிகரன் பேசினார். விழாவில் நகரசபை தலைவர் ஸ்ரீதர், ஒன்றியக்குழு துணைத்தலைவர் பொன்னுத்துரை, ஆர்.டி.ஓ. சுரேஷ், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் பாண்டி, நகராட்சி ஆணையாளர் காளிமுத்து, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் பட்டுராஜன், குணசேகரன், அ.தி.மு.க. நகரச்செயலாளர் ஜான்தாமஸ், கொடைக்கானல் சர்வதேச பள்ளி முதல்வர் கோரிஸ்டிக்ரூட், மாவட்ட கவுன்சிலர் சந்திரமோகன், ஒன்றிய கவுன்சிலர்கள் பாக்கியராஜ், நேரு, பண்ணைக்காடு பேரூராட்சி தலைவர் சண்முகசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் கலெக்டர் ஹரிகரன் பரிசுகளை வழங்கினார்.

**தமிழக விவசாய சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டம் ஈரோட்டில் நடந்தது**



ஈரோடு, தமிழக விவசாய சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டம் ஈரோட்டில் நடைபெற்றது.கூட்டம் தேசிய அளவில் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை கண்டித்து பல்வேறு இடங்களில் விவசாய சங்கங்கள் தனித்தனியாக போராடி வருகின்றன. அனைத்து விவசாயிகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான முயற்சியில் தமிழக விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள். அதன் முதற்கட்டமாக தமிழக விவசாய சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டம் ஈரோட்டில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் ஈரோடு, கோவை, திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 15-க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். புதிய கூட்டமைப்பு கூட்டத்தில், தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள விவசாய சங்கங்களை ஒருங்கிணைத்து ஒரு புதிய கூட்டமைப்பு உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் சுப்பிரமணியம், செல்லமுத்து, பழனிசாமி, வெங்கடாசலம் உள்பட பலர் கலந்துகொண்டனர். இதுகுறித்து இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது:-

நிலம் கையகப்படுத்தும் அவசர சட்டத்தை கைவிடுதல், பால் கொள்முதல் விலையை உயர்த்துதல், கரும்புக்கான விலையை உயர்த்துதல் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் விவசாயிகள் போராடி வருகிறார்கள். பல்வேறு மாநிலங்களில் விவசாய சங்கங்கள் தனித்தனியாக போராடுவதால் மத்திய, மாநில அரசு விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதில்லை. எனவே தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை சேர்ந்த விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட திட்டமிட்டு உள்ளோம். கர்நாடகா, கேரளா இதன் முதற்கட்டமாக நடைபெற்ற கூட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து விவசாயிகள் கலந்துகொண்டனர். இந்த ஒருங்கிணைந்த திட்டங்கள் குறித்து தமிழ்நாட்டில் உள்ள மற்ற விவசாய சங்க பிரதிநிதிகளிடம் பேச உள்ளோம். இதேபோல் கர்நாடகா, கேரளா ஆகிய மாநில விவசாயிகளையும் ஒன்று சேர்த்து புதிய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்படும். அதன்பிறகு தேசிய அளவில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு எதிராக விவசாயிகள் ஒன்று சேர்ந்து போராடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

**பயிர் பாதுகாப்பு மருந்து வினியோகம் திருவாரூர் கலெக்டர் தகவல்**



நெல் பயிரில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்து வினியோகம் செய்யப்படுவதாக திருவாரூர் கலெக்டர் மதிவாணன் கூறினார். குலை நோய் தாக்குதல் திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி யிருப்பதாவது:- திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்துள்ள டி.கே.எம். 9 ரக நெல் பயிரில் குலைநோய் தாக்குதல்காணப்படுகிறது. வெப்பநிலை குறைந்து குளிர் அதிகரிக்கும் போது இந்த நோய் அதிக அளவில் பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த வகை நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு வசதியாக டிரைசைக்ளோசோல், கார்பெண்டாசிம் உள்ளிட்ட பயிர் பாதுகாப்பு மருந்துகளை 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலை மருந்துகளை பெற்று கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

## மேட்டூரில் நீர்திறப்பு அதிகரிப்பு




மேட்டூர் : மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறப்பு விநாடிக்கு 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு 3,439 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, நேற்று 2,310 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று முதல் 1000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் வரத்து அதிகளவில் உள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 71.02 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 71.15 அடியாக உயர்ந்தது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு, : பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாமல் உள்ளதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவது விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஈரோடு மாவட்டத்தின்

முக்கிய உயிர்நாடியாக விளங்குவது பவானிசாகர் அணை. 120 அடி உயரமுள்ள பவானிசாகர் அணையில் 105 அடி வரை தண்ணீரை சேமிக்க முடியும். கடந்த 3 ஆண்டுகளாக கோடை காலத்தின் போது பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 50 அடிக்கும் குறைவாக இருந்தது. குறிப்பாக மே மாதத்தில் 45 அடிக்கும் கீழ் நீர்மட்டம் சென்று விடுவதால் கோடை காலத்தில் குடிநீர் தேவையை மட்டுமே பூர்த்தி செய்யும் அளவிற்கு நீர்இருப்பு இருக்கும். இந்த ஆண்டு மே மாதத்தில் கோடையிலும் தொடர் மழை பெய்ததால் அணையின் நீர்பிடிப்பகுதிகளான நீலகிரி, வடகேரளாவில் இருந்து போதிய நீர்வரத்து இருந்தது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் யாரும் எதிர்பாராத அளவிற்கு கிடுகிடுவென உயர்ந்தது. கடந்த மாதம் அணையின் நீர்மட்டம் 52 அடிக்கும் குறைவாக நீர்இருப்பு இருந்தது. வழக்கமாக கோடை காலத்தில் அணையின் நீர்வரத்து 100 முதல் 300 கனஅடி என்ற அளவிலேயே இருக்கும். ஆனால் இம்மாத துவக்கத்தில் பெய்த கோடை மழையால் நீர்வரத்து 1000 கனஅடிக்கும் குறையாமல் உள்ளதாலும், அணையில் இருந்து கீழ்பவானி, கொடிவேரி மற்றும் காலிங்கராயன் வாய்க்கால்களின் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டதாலும் அணையின் நீர்இருப்பு குறையாமல் தொடர்ந்து அதிகரித்து வந்தது. நேற்று முன்தினம் காலை 60.94 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 61.35 அடியாக உயர்ந்து காணப்பட்டது. அணையில் மொத்தம் 7.70 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளது. அணைக்கு நேற்று காலை 1772 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்த நிலையில் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக ஆற்றின் வழியே 100 கனஅடி வீதம் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. வேளாண் பல்கலைக்கழக பாசன நிலங்களுக்காக 5 கனஅடி வீதம் மட்டுமே கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டு சென்று கொண்டிருந்தது. இந்த 3 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கோடை காலத்தில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 61.35 அடியாக இருப்பது

விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் கூறுகையில், பவானிசாகர் அணையில் இப்போதே அணையின் நீர்மட்டம் 61.35 அடியாக உள்ள நிலையில் தென்மேற்கு பருவமழை சீசன் ஜூன் மாதம் துவங்கி விட்டால் அணைக்கு மேலும் நீர்வரத்து அதிகரிக்கும். பொதுவாகவே அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரியிலும், வடகேரளாவிலும் தென்மேற்கு பருவமழை சீசனில் தான் கூடுதல் நீர்வரத்தை பெற முடியும். கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை ஓரளவு கை கொடுத்ததால் தான் ஈரோடு மாவட்டத்தில் குறுவை, சம்பா நெல் சாகுபடி சீசன் அமோகமாக இருந்தது. இந்த ஆண்டும் பருவமழை கை கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதால் பவானிசாகர் அணை நிரம்ப வாய்ப்புள்ளது. இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**பவானி ஆற்றில் உபரிநீர் சேமிக்க தடுப்பணைகள்**

ஈரோடு, : மழை காலங்களில் வீணாக வெளியேற்றப்படும் உபரிநீரை சேமிக்கும் வகையில் பவானி ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று காலிங்கராயன் விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ஈரோட்டில் காலிங்கராயன் பாசன சபை கூட்டம் தலைவர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆலோசகர் கதிர்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பவானிசாகர் அணைக்கு போதிய நீர்வரத்து உள்ளதால் சீரமைப்பு பணிகளை போர்க்கால அடிப்படையில் முடித்து வருகின்ற ஜூன் 16ம் தேதி காலிங்கராயன் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக்கொள்வது, தஞ்சையில் சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் கிணறுகளுக்கு மின்இணைப்பு வழங்கப்படுவதை போல காலிங்கராயன் பாசன பகுதிகளில் வெட்டப்படும் கிணறுகளுக்கும் மின்இணைப்பு வழங்க வேண்டும். மழைக்காலங்களில் வீணாகி வெளியேற்றப்படும் உபரிநீரை சேமிக்கும் வகையில் கொடிவேரியில் இருந்து காலிங்கராயன் அணைக்கட்டு வரை பவானி ஆற்றில் நான்கு

இடங்களில் தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் அனைத்து விளைபொருட்களுக்கும் உரிய விலை இல்லாமல் இடைத்தரர்கர்களால் சுரண்டப்படும் நிலை உள்ளதால் உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ரூ.70 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்**

ஈரோடு, : பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.70 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் 1683 மூட்டைகளில் 80 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். முதல் தர கொப்பரை குறைந்தபட்சம் கிலோ ரூ.85.55க்கும், அதிகபட்சம் ரூ.89.20க்கும் ஏலம் மூலமாக விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்சம் கிலோ ரூ. 53.85க்கும், அதிகபட்சமாக கிலோ ரூ.84.70க்கும் விலை போனது. மொத்தம் ரூ.70 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் இந்த ஏலத்தில் கலந்து கொண்டனர்.

**குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும் வீரிய ஒட்டுரக மக்கா சோளத்தை சாகுபடி செய்தால் அதிக மகசூல் சேதுபாவாசத்திரம்:** குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும் வீரிய ஒட்டுரக மக்கா சோளத்தை சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணெய் எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம், மைதா, சிரப்,

சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ- 1, கே- 1, கங்கா- 5, கே.எச் -1,2,3, கோ.எச்.எம் -5, எம் -900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே -6240, பயனீர்- 30 வி- 62, பயனீர்- 30 வி - 92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும். 1 ஏக்கருக்கு 500கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி(அரிசி)கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உளர்த்தி பின்பு 60க்கு 20 செ.மீ. இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செ.மீ செடிக்கு செடி 20 செ.மீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும் ஒரு ச.மீ 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவேண்டும். விதைப்புக்கு முன் 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரமிடவேண்டும். அத்துடன் நடவு வயலில் 1 ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். சாகுபடிக்கு மொத்தம் பரிந்துரைக்கப்படும் உர அளவான 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஸ் இதில் அடியுரமாக மட்டும் 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஸ் இடவேண்டும். விதைத்த 25&ம் நாள்முதல் மேலுரமாக 60 கிலோ யூரியா, 45&ம் நாள் 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும்

போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதம் நனையும் தூள் 200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர் / ஏக்கர் என்ற அளவில் 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் விதைத்த 17 &18 நாளில் ஒரு முறையும் 40 முதல் 45வது நாளில் ஒரு முறையும் கை களை எடுக்கவேண்டும். ஆரம்பக்கட்டத்தில் குருத்து புழு தாக்குதல் தென்படும் இதனை கட்டுப்படுத்திட செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குருனை மருந்தினை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த 20 வது நாள் இடவேண்டும். தேவைக்கேர்ப்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். பூக்கும் தருனத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ. 45,000 வரை வருமானம் பெறலாம் என்றார்.

### விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கரூர்: கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் வரும் 29ம்தேதி (வெள்ளி) காலை 11மணிக்கு கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடக்கிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கஉறுப்பினர்கள், அனைவரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறலாம். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பொன்னி அரிசி விற்பனை செய்ய பொதுமக்கள் வலியுறுத்தல்

சிவகாசி, : சிவகாசி பகுதி கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் வெளி மார்க்கெட் சந்தை விலையை விட குறைந்த விலையில் பொன்னி அரிசி விற்பனை செய்ய பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விருதுநகர், சிவகாசி, ராஜபாளையம், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டையில்

கூட்டுறவு விற்பனை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சங்கங்கள் போதிய வருவாயின்றி நலிவடைந்த நிலையில் செயல்பட்டன. இதையடுத்து நகை கடன், உரம் மற்றும் விதை விற்பனை மூலம் சங்கங்களின் வருவாயை அதிகரிக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர். இதில் நகைக் கடன்கள் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் வருவாய் அதிகரித்தது. கூட்டுறவு சங்கங்களின் வருவாயை மேலும் அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

சிவகாசி பகுதி கூட்டுறவு விற்பனைச் சங்க நிர்வாகத்தின் கீழ் செயல்படும் 11 ரேஷன் கடைகளில் சில ஆண்டுகளுக்கு முன் பொன்னி அரிசி விற்பனை செய்யப்பட்டது. திருச்சி மண்ணச்சநல்லூரில் தரமான பொன்னி அரிசியை மொத்த விலைக்கு கொள்முதல் செய்து வெளிச்சந்தையைவிட குறைந்த விலையில் விற்பனை செய்தனர். 25 கிலோ அரிசி பை ஒன்றுக்கு அடக்க விலையைவிட ரூ.5 கூடுதலாக வைத்து விற்பனை செய்தனர். பொன்னி அரிசி மொத்தமாக கொள்முதல் செய்ததால், ஆலை உரிமையாளர்களே எவ்விதக் கட்டணமும் இன்றி நேரடியாக கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் அரிசியை இறக்கிச் சென்றனர். வெளி மார்க்கெட் விலையைவிட கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்த விலைக்கு பொன்னி அரிசி விற்பனை செய்யபட்டதால் அப்போது மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். எனவே, வெளிச்சந்தையில் அரிசி விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் குறைந்த விலையில் பொன்னி அரிசி விற்பனை செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து கூட்டுறவு விற்பனை சங்க அலுவலர் ஒருவர் கூறுகையில், “கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பொன்னி அரிசி முன்பு விற்பனை செய்யப்பட்டது. இதற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. லாப நோக்கமின்றிச் செயல்பட்டதால் கொள்முதல் விலைக்கே அரிசி

விற்கப்பட்டது. தற்போது இந்தத் திட்டம் நடைமுறையில் இல்லை” என்றார்.

**பூக்கள் சாகுபடிக்கு மாறி வரும் விவசாயிகள்**

ஸ்ரீமுஷ்ணம், : ஸ்ரீமுஷ்ணத்தை அடுத்த மதகளிர்மாணிக்கம் கிராமத்தில் வசிக்கும் விவசாயி வெற்றிவேல் தனக்கு சொந்தமான நிலத்தில் ரோஜா, சம்மங்கி, கோழிகொண்டை, சாமந்தி உள்ளிட்ட பூக்களை பயிர்செய்து கடலூர், நெய்வேலி உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் விவசாயம் முக்கிய தொழிலாக இருந்து வந்தது தற்போது நலிவடைந்து விவசாயிகள் கடனில் சிரமபட்டு வரும் நிலை உள்ளது. விவசாய பயிர்களுக்கு உரிய விலையின்மை, இயற்கை சீற்றத்தால் இழப்பு உள்ளிட்டவைகளாலும் மாற்று பயிர் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே பூக்கள் பயிர் செய்ய ஆர்வம் ஏற்பட்டு வேளாண்துறை மூலம் உரிய ஆலோசனை பெற்று சொட்டு நீர் பாசனம் மூலம் ரோஜா, சம்மங்கி, கோழிகொண்டை, சம்மந்தி உள்ளிட்ட பூச்செடிகள் பயிர் செய்து வருகிறேன். அரசு மானியத்துடன் தெளிப்பான் பாசனமுறையில், இயற்கை முறையில் தேவையான இடுபொருட்கள் பயன்படுத்தி மற்றவர்களுக்கும் இதனை அளித்து வருவதால் இதர விவசாயிகளும் இயற்கை முறை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். பூக்களும் அதிகளவு பூப்பதுடன் கடைகளில் விற்கும் போது பூக்களும் தரம் குறையாமல் உள்ளது என்றார்.

**விவசாயிகள் சங்க மண்டல மாநாடு**

வடலூர், : நெய்வேலியில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மண்டல மாநாடு நடந்தது. மாநில பொருளாளர் நாகப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் மாதவன் வரவேற்றார். அகில இந்திய பொதுச்செயலாளர் ஹன்னன்முல்லா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மாநில தலைவர் பாலகிருஷ்ணன் எம்எல்ஏ, திரைப்பட இயக்குனர் தங்கர்பச்சான்

உள்ளிட்ட பலர் பேசினர். கூட்டத்தில், என்எல்சிக்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு நான்கு மடங்கு இழப்பீடு, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை, ஜெயம்கொண்டம் பகுதியில் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள 12 ஆயிரம் ஏக்கர் நிலங்களை மீண்டும் விவசாயிகளுக்கே வழங்க வேண்டும், நில உச்சவரம்பு சட்டத்தை அமல்படுத்த வேண்டும், விவசாய விளை நிலங்களை ரியல் எஸ்டேட்டுக்கு அனுமதிக்க கூடாது, வேலூர், ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் நவீன தொழிற்சாலைகளுக்கு கையகப்படுத்தப்பட்டு, பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை மீண்டும் விவசாயிகளுக்கே வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்டபொருளாளர் தட்சணாமூர்த்தி நன்றி கூறினார்.

**2700 மூட்டை மஞ்சள் ரூ.1.50 கோடிக்கு விற்பனை**

திருச்செங்கோடு: நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் சேலம் மாவட்டம் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதனை வாங்க ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள்வந்திருந்தனர்.

டெண்டர் மூலம் ரூ.1.50 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6,449 முதல் 8,739 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.4677 முதல் ரூ.7,439 வரை விலை போனது. பனங்காளி ரகத்திற்கு ரூ.8,399 முதல் 18,399 வரை விலை கிடைத்தது. பனங்காளி ரக மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.